**கவனிக்க** .- *2015.02.27 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1909 - 2015 අප්‍රේල් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.02

*1909 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 684 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 687 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.11.25 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபையில் அங்கீகாரம் பெறப்பட்ட பிரேரணைக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்பவேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தவிசாளர்,*
*ரம்புக்கனைப் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரம்புக்கனை,*
*2014, திசெம்பர் 22.*

*வீதியின் விபரம்*

| | | |
|---|---|---|
| *நீளம்* | - | *1 கி. மீற்றர்* |
| *அகலம்* | - | *8 அடி* |
| *வீதியின் பெயர்* | - | *பெத்தவல கம்மெத சுற்றுவட்ட வீதி* |
| *கிராம அலுவலர் பிரிவு* | - | *பெத்தவல* |
| *ஆரம்பம்* | - | *பெத்தவல கைத்தறி நிலையம்* |
| *முடிவு* | - | *பிங்கும்புர* |

*பெத்தவல கைத்தறி நிலையம் அருகில் ஆரம்பிக்கின்ற இடதுபக்கமாக வை. எம். லொகுபண்டா மற்றும் வை. எம். ஜயதிஸ்ஸ பண்டா என்பவர்களுக்கு உரித்தான யாபாகே ஹிட்டினாவத்த மற்றும் கெதர கும்புர, எச். எம். பிஸோ மெணிகே என்பவருக்கு உரித்தான கரத மற்றும் திக்கும்புர, ஈ. எம். ஏ. ஏகநாயக என்பவருக்கு உரித்தான கும்பல் அங்க கும்புர, ஐ. எம். சின்தக பண்டார என்பவருக்கு உரித்தான காஸியா கும்புர, ஐ. எம். அஸித ரங்க பண்டார என்பவருக்கு உரித்தான கும்லன்கே கும்புர, எச். ஜீ. யு. ஏகநாயக என்பருக்கு உரித்தான காஸியா கும்புர, எச். எம். பிஸோ மெணிகே என்பவருக்கு உரித்தான பட்டலாபிட்டிய வத்த, வை. கே. நந்தாவதீ மெணிகே என்பவருக்கு உரித்தான பட்டலாபிட்டிய வத்த, ஐ. எம். காமிணி பண்டார என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, ஆர். எம். ஏ. சமரகோன் என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, டபிள்யூ. ஏ. குணதிலக என்பருக்கு உரித்தான வத்தே கெதர தொம்பே கும்புர, டபிள்யூ. ஏ. டிகிரி பண்டா என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, டபிள்யூ. எம். அதுல தேஜ ஹேமன்த வீரகோன் என்பவருக்கு உரித்தான தெனியவத்த எனும் காணிகளாலும்,*

*வலதுபக்கமாக வை. எம். லொகு பண்டா மற்றும் வை. எம். ஜயதிஸ்ஸ என்பவர்களுக்கு உரித்தான யாப்பாகே ஹிட்டினாவத்த மற்றும் கெதர கும்புர, எச். எம். பிஸோ மெணிகே என்பவருக்கு உரித்தான கரத மற்றும் திக்கும்புர, ஈ. எம். ஏ. ஏகநாயக என்பவருக்கு உரித்தான கும்பல் அங்க கும்புர, ஐ. எம். சிந்தக பண்டார என்பவருக்கு உரித்தான காஸியா கும்புர, எச். எம். பிஸோ மெணிகே என்பவருக்கு உரித்தான பட்டலாபிட்டிய வத்த, வை. கே. நந்தாவதீ மெணிகே என்பவருக்கு உரித்தான பட்டலாபிட்டிய வத்த, ஐ. எம். காமிணி பண்டார என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, ஆர். எம். ஏ. சமரகோன் என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, டபிள்யூ. ஏ. குணதிலக என்பவருக்கு உரித்தான வத்தே கெதர தொம்பே கும்புர, டபிள்யூ. ஏ. டிகிரி பண்டா என்பவருக்கு உரித்தான தொம்பே கும்புர, டபிள்யூ. எம். அதுல தேஜ ஹேமன்த வீரகோன் என்பவருக்கு உரித்தான தெனியவத்த எனும் காணிகளாலும் எல்லையாகும் பெத்தவல கம மெத சுற்று வட்ட வீதி.*

*வீதியின் விபரம்*

| | | |
|---|---|---|
| நீளம் | - | 800 மீற்றர் |
| அகலம் | - | 8 அடி |
| வீதியின் பெயர் | - | பெத்தவல கம்மெத சுற்றுவட்ட வீதி நாஓருவ வரை |
| கிராம அலுவலர் பிரிவு | - | பெத்தவல |
| ஆரம்பம் | - | பெத்தவல கம்மெத சுற்றுவட்ட வீதி கும்பலன்கே கும்புர அருகால் |
| முடிவு | - | பெத்தவல நாஓருவ |

பெத்தவல கம்மெத சுற்றுவட்ட வீதியில் கும்பலன்கே கும்புர அருகால் ஆரம்பிக்கின்ற இடதுபக்கமாக கே. எம். ஏ. குமாரசிங்ஹ என்பவருக்கு உரித்தான கும்பலன்கே கும்புர, ஆர். எம். ஐ. உபாலி பண்டார ரத்னாயக என்பவர்களுக்கு உரித்தான பாலுவத்த தெனிய, ஐ. எம். காமிணி பண்டார என்பவருக்கு உரித்தான ஹிட்டினாவத்த, ஆர். எம். திலகரத்தின என்பவருக்கு உரித்தான கல்கொடேஹேன, ஈ. எம். ஏ. ஏகநாயக என்பவருக்கு உரித்தான கல்கொடேஹேன, டி. ஏ. அஸங்க கீர்த்தி பண்டார தாஸ்வத்த என்பவருக்கு உரித்தான ஹப்புகஹமடஹேன எனும் காணிகளில் எல்லையாவதுமான,

வலதுபக்கமாக கே. எம். ஏ. குமாரசிங்ஹ என்பவருக்கு உரித்தான கும்பலன்கே கும்புர, ஆர். எம். ஐ. உபாலி பண்டார ரத்னாயக என்பவருக்கு உரித்தான பாலுவத்த தெனிய, ஐ. எம். காமிணி பண்டார என்பவருக்கு உரித்தான ஹிட்டினாவத்த, ஆர். எம். திலகரத்தின என்பவருக்கு உரித்தான கல் கொடஹேன, ஈ. எம். ஏ. ஏகநாயக என்பவருக்கு உரித்தான கல்கொடஹேன, டி. ஏ. அஸங்க கீர்த்தி பண்டார தாஸ்வத்த என்பவருக்கு உரித்தான ஹப்புகஹமடஹேன எனும் காணிகளுக்கு எல்லையாவதுமான பெத்தவல கமமெத சுற்றுவட்ட வீதி நாஓருவ வரை வீதி.

*வீதியின் விபரம்*

| | | |
|---|---|---|
| நீளம் | - | 148 மீற்றர் |
| அகலம் | - | 10 அடி |
| வீதியின் பெயர் | - | சியம்பலாகஹமுலஹேன குடியேற்ற வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | யோதகம |
| ஆரம்பம் | - | ஹிரிவடுன்ன யோதகம வீதியில் மதகு அருகில் சியம்பலாகஹமுலஹேன குடியேற்றத்திற்கு திரும்புகின்ற சந்தி அருகால் |
| முடிவு | - | சியம்பலாகஹமுலஹேன குடியேற்றத்தில் சிறியாவதீ என்பவரின் காணி அருகால் |

ஹிரிவடுன்ன யோதகம வீதியில் மதகு அருகால் ஆரம்பித்து இடதுபக்கமாக பி. ஜீ. பியசேன மற்றும் பி. ஜி. பிரேமசிறி மற்றும் பி. ஜீ. சேனாரத்தின, டபிள்யூ. பீ. பொடி நோனா மற்றும் கே. திஸ்ஸ விஜேரத்தின, ஆர். ஏ. நிஹால் பிரேமசிறி என்பவர்களுக்கு உரித்தான சியம்பலாகஹமுலஹேன எனும் காணிகளினாலும்,

வலதுபக்கமாக எச். பீ. காமிணி விஜேரத்தின, எச். பீ. பிரேமதாஸ, எச். பீ. நாலனீ எதிரிசிங்ஹ, எம். பீ. விலியொன், ஜீ. ஜீ. பிரமலதா, கே. பீ. சிறியாவதீ, எச். பீ. நிமல், பியதிஸ்ஸ என்பவர்களுக்கு உரித்தான சியம்பலாகஹமுலஹேன எனும் காணிகளுக்கு எல்லையாவதுமான யோதகம சியம்பலாகஹமுலஹேன குடியேற்றம் வரையிலான வீதி.

4-47/1

---

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.12.30 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபையில் அங்கீகாரம் பெறப்பட்ட பிரேரணைக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்பவேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

ரம்புக்கனைப் பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2015, சனவரி 20.

வீதியின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | - | 42 மீற்றர் |
| அகலம் | - | 3 மீற்றர் |
| வீதியின் பெயர் | - | வஹவ அபேசேகர வீதியிலிருந்து ஆரம்பிக்கின்ற துணை வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | வஹவ |
| ஆரம்பம் | - | வஹவ அபேசேகர மாவத்தை |
| முடிவு | - | அபேசேகர மாவத்தையில் ஆரம்பிக்கின்ற துணை வீதியினுள் கித்சிறியின் வீடு |

வஹவ அபேசேகர மாவத்தையில் ஆரம்பிக்கின்ற இடதுபக்கமாக எஸ். டபிள்யு. குணதிலக என்பவருக்கு உரித்தான கோன்தெனிகந்த காணியாலும்,

வலதுபக்கமாக எஸ். டபிள்யு. குணதிலக என்வருக்கு உரித்தான கோன்தெனிகந்த காணியாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ள வஹவ அபேசேகர மாவத்தையில் ஆரம்பிக்கின்ற கித்சிறி அவர்களின் வீடு வரையிலான துணை வீதி

| | | |
|---|---|---|
| வீதியின் விபரம் | - | |
| நீளம் | - | 540 அடி |
| அகலம் | - | 12 அடி |
| வீதியின் பெயர் | - | அந்திரமட வட்டஹபத்கந்த வெவேகேல்ல வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | ஹிரிவடுன்ன |
| ஆரம்பம் | - | ஹிரிவடுன்ன இம்புல்கஸ்தெனிய வீதியில் அந்திரமட வெவேகேல்ல காணி |
| முடிவு | - | வட்டஹபத் கந்த வவேகல்ல |

ஹிரிவடுன்ன இம்புல்கஸ்தெனிய வீதியில் அந்திரமட வவேகேல்ல எனும் காணியில் ஆரம்பிக்கின்ற இடதுபக்கமாக பீ. கே. ஜீ. குணபால பெரமுண என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல, ஜே. ஏ. பி. என். ஜயகொடி என்வருக்கு உரித்தான அந்திரமட வெவேகேல்ல, கே. எம். ஆர். நவரத்தின என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல, எச். ஜீ. குணரத்தின என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல, ஜே. எம். சந்தருவன் சந்தன பிரதீப் என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல எனும் காணிகளாலும்,

வலதுபக்கமாக ஜே. ஏ. பீ. என். ஜயகொடி என்பவருக்கு உரித்தான அந்திரமட வவேகேல்ல, டீ. டபிள்யு. சுஜானி கருணாநாயக என்பவருக்கு உரித்தான வவேகேல்ல, எம். ஜீ. திலகரத்தின பண்டார என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல, எஸ். கே. ஏ. நானாயக்கார என்பவருக்கு உரித்தான வெவேவத்த, எச். ஜீ. ரம்பண்டா என்பவருக்கு உரித்தான வேவேகேல்ல, எம். டி. ஜே. ஐ. கருணாதிலக என்பவருக்கு உரித்தான வட்டஹபத் கந்த வெவேகேல்ல (வெவேவத்த), ஆர். வீ. ராஜபக்ஷ என்பவருக்கு உரித்தான வவேகேல்ல எனும் காணிகளில் எல்லையாவதுமான ஹிரிவடுன்ன இம்புல்கஸ்தெனிய வீதியில் அந்திரமட வெவேகேல்ல காணியிலிருந்து வட்டஹபத் கந்த வெவேகேல்ல வரையிலான அந்திரமட வட்டஹபத் கந்த வெவேகேல்ல வீதி.

வீதியின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | - | 450 அடி |
| அகலம் | - | 8 அடி |
| வீதியின் பெயர் | - | ஹெரமிட்டிபான வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | வராகொட கிராம அலுவலர் பிரிவு |
| ஆரம்பம் | - | கொழும்பு கண்டி வீதியில் 85/4 மதகு அருகால் |
| முடிவு | - | ஹிட்டினாவத்த காணி |

கொழும்பு கண்டி வீதியில் 85/4 மதகு அருகால் ஆரம்பித்து இடதுபக்கமாக பி. வி. சாலிந்த பிரதீப் குமார என்பவருக்கு உரித்தான பல்பொக்க வத்த, வை. லயனல் செனவிரத்தின என்பவருக்கு உரித்தான ஹிட்டினாவத்த அம்பகஹமுலஹேன, ஜீ. ஜீ. ரத்னசிறி என்பவருக்கு உரித்தான ஹேகும்புர கொட வீ பேல ஹிட்டினாவத்த எனும் காணிகளாலும்,

வலதுபக்கமாக பி. வீ. எஸ். கருணாரத்தின என்பவருக்கு உரித்தான பல்பொக்க வத்த, எம். பி. ஜீ. இந்துனில் பிரியன்த ராஜவர்தன என்பவர்களுக்கு உரித்தான ஹிட்டினாவத்த அம்பகஹமுலஹேன, எம். பி. நந்தன ராஜவர்தன என்பவருக்கு உரித்தான ஆசாரிகே பொல்வத்த எனும் காணிகளுக்கு எல்லையாவதுமான கொழும்பு கண்டி வீதியில் 85/4 மதகு அருகாமையிலிருந்து ஹிட்டினாவத்த வரையிலான ஹெரமிட்டிபான வீதி.

4-47/2

---

# நானாவித அறிவித்தல்கள்

## வவுனியா வடக்கு பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை 2015.01.20 ஆந் திகதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் பிரசுரிக்கப்படுகிறது.

**தீர்மானம்**

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி) மன்றங்களுக்கும் ஏற்புடையதாகும் என கௌரவ வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1994 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய 842 ஆம் இலக்க வர்த்தமானியில் (பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்டதுமான நியமனத்துணைவிதிகள் I ஆம் பாகத்தையும், நியமத்துணைவிதிகள் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் 1 தொடக்கம் 42 வரையுள்ளவற்றையும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வது என்று வவுனியா வடக்கு பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

4-134/1

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆம் அத்தியாயம்)

**7 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் - 2015**

வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்திபெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 17 (1) ஆம் பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும் அரசினால் பிரகடனப்படுத்தப்படும் திகதிகளிலும், என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை

செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திரதினம்
2. மகா சிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள்)
4. உலக மிருக தினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

4– 134/6

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல் கட்டணம் - 2015

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126- 7 ஊ ஆம் பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 1988.08.23 ஆந் திகதியிட்ட 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் பகிரங்கப் படுத்தியுள்ள (62/A, 63/A, 64/A) பக்கங்களில் 1998.04.17 ஆந் திகதிய 1024 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணை விதியின் ஏற்பாடுகளின்படி வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின் மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும் போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு வவுனியா வடக்கு பிரதேச சபையினால் ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். இவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தைச் செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் அறியத்தரப்பட்டுள்ளது.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

**அட்டவணை**

| | ரூபா ச. |
|---|---|
| (1) சுவர் ஒன்றில் அல்லது பெயர்ப்பலகை ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு (பெயர்ப்பலகை ஒன்றில் இரு பக்கங்களிலும் அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படின் இரு பக்கங்களிற்கு கட்டணம் அறிவிக்கப்படல் வேண்டும்.) | 100 0 |
| (2) "பெனர்" ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | 50 0 |
| (3) ஒரு பலகையில் அல்லது ஒரு துணை சகிதம் காட்சிக்கு வைக்கும் மின்விளக்கு ஒளியுடன் கூடிய அறிவித்தலுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | 100 0 |
| (4) நிலையான வர்த்தக நிலையங்களில் விளம்பரங்களுடன் கூடிய பெயர் பலகைக்கு சதுர அடிக்கு | 100 0 |

4-134/17

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

கட்டிட அனுமதி - 2015

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன், சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (அத்தியாயம் 600) நடைமுறைகளும் 1998 01.01 ஆந் திகதியில் இருந்து எமது பிரதேச சபைக்கு ஏற்புடையதாக அமுலுக்கு வந்ததற்கு அமைவாக எனக்குள்ள தத்துவங்களையும் அதிகாரங்களையும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அதிகாரங்களையும் கொண்டு சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் பரிசோதனையின் சார்பிலும் ஏனைய விடயங்கள் சார்பிலும் கீழ்க்காட்டப்படும் அட்டவணைப் பிரகாரம் 2015.01.01 இல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என இத்தால் தீர்மானித்து அறிவிக்கின்றேன்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

**அட்டவணை**

| இல. | விபரம் | 2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | வதிவிடத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுர அடிக்கு) | 500 0 |
| 2. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு (3000 சதுர அடிக்கு மேல்) | 700 0 |
| 3. | 500 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டிடங்களுக்கு | 325 0 |
| 4. | 500 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு | 600 0 |
| 5. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக்கொண்ட வதிவிட கட்டிடங்களுக்கு | 500.0 |
| 6. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக்கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு | 700 0 |
| 7. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு தளப்பரப்பைக்கொண்ட வதிவிட கட்டிடங்களுக்கு | 800 0 |
| 8. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு தளப்பரப்பைக்கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு | 1,000 0 |
| 9. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வதிவிட கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | 250 0 |
| 10. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | 450 0 |
| 11. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வதிவிட கட்டிடங்களுக்கு | 250 0 |
| 12. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வர்த்தக கட்டிடங்களுக்கு | 450 0 |
| 13. | வதிவிட கட்டிட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப் படாமையால் மீளப்புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 200 0 |
| 14. | வர்த்தக கட்டிட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப் படாமையால் மீளப்புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 400 0 |
| 15. | வதிவிட கட்டிடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 175 0 |
| 16. | வர்த்தக கட்டிடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 400 0 |
| 17. | கட்டிட விண்ணப்பப் படிவக் கட்டணம் | 200 0 |
| 18. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு | 1,000 0 |

4-134/3

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

நாய்கள் பதிவு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) – 2015

வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4 ஆம் பிரிவின்படி 2015 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணம் அவைகள் ஆண் நாய்களோ, பெண் நாய்களோ எதுவாக இருப்பினும் நாய் ஒன்றிற்கு ரூபா 50 ஆக விதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் என்பதனை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

4-134/4

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் – 2015

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கமைவாகவும், உரித்தாக்கப்பட்ட

தத்துவங்களின் பயனைக்கொண்டு 2001 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேச சபையின் தலைவருக்கு கையளித்ததன்கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவ தோடு, கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு, படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள், ஆகியவை விதித்து அறவிடப்படல் செய்வது என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்துகின்றேன். இவ்வெளிப்படுத்தல் ஆனது இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும்.

### அட்டவணை

1. 25 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சவர்க்காரம், அழுக்கு அகற்றிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்புப் பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
2. 150 மெற்றிக் தொன்னுக்கு குறைவான மொத்தக் கொள்வனவு கொண்ட பாரிய திரவப் பெற்றோலிய களஞ்சிய வசதிகள்.
3. நாளொன்றுக்கு 100 கிலோகிராமிற்கு குறைவானதும் 50 கிலோகிராமிற்கு மேற்பட்டதுமான உற்பத்திக் கொள்ளளவு உடைய புகையூட்டிய இறப்பர் பட்டைத் தட்டுத் தயாரித்தல் கைத்தொழில்கள்.
4. தனி உற்பத்திச் சட்டத்தின் ஒரு குழுமத்திற்கு 10,000 தென்னஞ்சிரட்டைகளிற்கு குறைவானதும் 10,000 தென்னஞ் சிரட்டைகளிற்கு மேற்பட்ட மொத்த உள்ளீட்டுக் கொள்ளளவு உடைய தென்னஞ்சிரட்டை எரித்தல் கைத்தொழில்.
5. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆயுர்வேத, சுதேச மருந்து உற்பத்திகளின் தயாரித்தல், பிரித்தெடுத்தல் அல்லது முறைப்படுத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
6. ஈயத்தை உருக்கி எழுத்து தயாரித்தல் தவிர்ந்த அச்சகங்கள்.
7. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பற்றிக் கைத்தொழில்கள்.
8. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை மூலப்பொருளாக பாவித்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
9. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப் பட்ட சேதனக் கரைப்பான்களை பாவித்தலுடன் உலர்சலவை நடவடிக்கைகளுடன் கூடிய வர்த்தக சலவை அகங்கள்.
10. ஈரத் தொழிற்பாடுகளைப் பிறப்பிக்கும் கழிவுகள் தவிர்ந்த தோல் பதனிடும் கைத்தொழில்கள்.
11. இயற்கை இழைகளை வெளிறச்செய்தல் அல்லது சாயமூட்டும் நடவடிக்கையை கொண்டிராத தென்னந்தும்பு ஆலைகள்.
12. 25 இற்கு குறைவான நெசவு இயந்திரங்களைக் கொண்ட நெசவுசாலைகள்.
13. 10 இற்கு மேற்பட்ட கைத்தறிகளைக் கொண்ட கைத்தறிச் சாலைகள்.
14. சீனித்தொழிற்சாலை அல்லது சீனி சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர்ந்த கரும்புக் கைத்தொழில்கள்.
15. 25 இற்கு குறைவானவர்களும் 05 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மரக்கறி, பழம், இறைச்சி, கடல் உணவு மற்றும் பால் பதனிடல் கைத்தொழில்கள்.
16. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல் கைத்தொழில்கள்.
17. 25 இற்கு குறைவானவர்களும் 5 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெதுப்பக உற்பத்திகள், பிஸ்கட்டுகள், இனிப்புக்கள் தயாரிக்கும் கைத்தொழிற்சாலைகள்.
18. 25 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மதுசாரம் தவிர்ந்த பானம் தயாரிக்கும் கைத்தொழிற்சாலைகள்.
19. எரிசோடாவைப் பாவித்து போத்தல் கழுவும் நடவடிக்கை களைக் கொண்டிராத ஏனைய போத்தலிடும் நிலையங்கள்.
20. நாளொன்றிற்கு 5,000 கிலோ கிராமிற்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு கொண்ட ஈர நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள்.
21. உலர் நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள் (ஈரமுறை தவிர்ந்த ஏனையவை).
22. அரைக்கும் ஆலைகள்.
23. 2500 இற்கு குறைவானதும் 50 இற்கு மேற்பட்டதுமான பறவைகளைக் கொண்டிருக்கும் கோழிப்பண்ணைகள்.
24. 50 இற்கு குறைவானதும் 05 இற்கு மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் பன்றிப் பண்ணைகள்.
25. 50 இற்கு குறைவானதும் 10 இற்கு மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் மாட்டு/ஆட்டுப்பண்ணைகள்.
26. நாளொன்றிற்கு 25 மெற்றிக்தொன்னுக்கு குறைவான உற்பத்திக் கொள்வனவு உடைய விலங்குத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

27. 300 கிலோவிற்கு குறைவானதும் 100 கிலோவிற்கு மேற்பட்டதுமான மொத்த உற்பத்தித் திறன் கொண்ட நீர் அல்லது சூரிய அல்லது காற்றுவலு உற்பத்தி தவிர்ந்த மின்சாரப் பிறப்பாக்கி கைத்தொழில்கள்.

28. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான உற்பத்தித் திறன் கொண்ட கொங்கிறீற் கலவை நிலையங்கள்.

29. கொங்கிறீற் அச்சுக் கைத்தொழில்கள்.

30. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக் குற்றி தயாரித்தல் கைத்தொழில்கள்.

31. 20 மெற்றிக்தொன்னுக்கு குறைவான உற்பத்தித் திறன்கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.

32. 25 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மட்பாண்டக் கைத்தொழில்கள்.

33. ஓடு மற்றும் செங்கட்டிச் சூளைகள்.

34. கை உபகரணங்களை பாவித்து கைகளால் உடைத்தல் நடவடிக்கைகள் தவிர்ந்த நாளொன்றிற்கு 25 கன மீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு உடைய கருங்கல், உடைத்தல் அல்லது பதனிடுதல் கைத்தொழில்கள்.

35. நாளொன்றிற்கு 5 மெற்றிக் தொன்னுக்கு குறைந்த உள்ளீட்டுக் கொள்ளளவு கொண்ட எரியூட்டிகள்.

36. போரான் பரிகரணம் மற்றும் மருந்தைப் பழுதடையாது பாதுகாத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.

37. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான கொள்ளளவு உடைய அரியும் ஆலைகள்.

38. 3 குதிரை வலுக்களுக்கு மேற்பட்ட வலுக்களைப் பாவிக்கும் தச்சு வேலைத்தளங்கள்.

39. 20 இற்கு குறைவான அறைகளைக் கொண்ட உல்லாச விடுதிகள், விருந்தினர் இல்லங்கள் மற்றும் இளைப்பாறும் இல்லங்கள்.

40. 5 இற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சமைக்கும் வசதிகளுடன் கூடிய தங்கும் வசதியற்ற உல்லாச விடுதிகள்.

41. 25 இற்கு மேற்பட்டவர்களும் 200 இற்கு குறைந்தவர்களுமான தங்குநர்களுக்கு உணவு உறைவிட வசதிகள் வழங்கக்கூடிய விடுதிகள்.

42. மாற்று முறை ஒன்றிற்கு 200 இற்கு குறைவானவர்களும் 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தைத்த ஆடைக் கைத்தொழில்கள்.

43. மாதமொன்றிற்கு 600 கனமீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவுடன் கூடிய தனித்துளை வெடிப்புச் செயற் பாடுகள்.

44. 25 இற்கு குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட கடைச்சல் பட்டறைகள், உருக்கி ஒட்டும் (வெல்டிங்) வேலைத் தளங்கள் உட்பட வடிவமைப்புத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள், இயந்திக் கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது ஒன்றிணைக்கும் கைத்தொழில்கள்.

45. பழுது பார்த்தல், பராமரித்தல் மற்றும் தன்னியக்க வாயு நிலையங்களை ஸ்தாபித்தல் என்பவற்றைச் செய்யக்கூடிய வசதிகள் உள்ளிட்ட வாகனங்களைப் பழுது பார்க்கும் அல்லது பராமரிக்கும் நடவடிக்கைகள் செய்யும் வாகனங்கள் திருத்தும் இடங்கள்.

46. சுத்திகரிப்பு நிலையம்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

4—134/5

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

உரிமக் கட்டணம் அறவீடு - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150 (1), (2), 151, 152(1), (2), 153 (1), 154 (1) ஆம் பிரிவுக்கு அமைவாக, 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உரிமக்கட்டணம். தொழில் மீதான வரி அறவிடுவது என 2012.12.20 ஆந் திகதிய 4 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. உரிமக்கட்டணங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் 31.03.2015 க்கு முன் செலத்தப்படல் வேண்டும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

**அட்டவணை**

| இல. | வியாபாரத்தின் தன்மை | 2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | தேநீர் கடை நடாத்துதல் "A" | 1,000 0 |
| 2. | தேநீர் கடை நடாத்துதல் "B" | 800 0 |
| 3. | சாப்பாட்டுக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 4. | தேநீர்க் கடையும், சாப்பாட்டுக்கடையும் நடாத்துதல் | 1,000 0 |
| 5. | பேக்கரி நடாத்துதல் | 1,000 0 |
| 6. | முடி வெட்டும் கடை நடாத்துதல் | 500 0 |
| 7. | சலவைக்கடை நடாத்துதல் | 550 0 |
| 8. | மாட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 1,000 0 |
| 9. | மீன்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 10. | கூட்டுறவுச்சங்க விற்பனைக்கடைகள் நடாத்துதல் | 1,000 0 |
| 11. | ஆட்டிறைச்சிக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 12. | சில்லறைக்கடை நடாத்துதல் தரம் "A" | 1,000 0 |
| 13. | சில்லறைக்கடை நடாத்துதல் தரம் "B" | 550 0 |
| 14. | குளிர்பானக்கடை நடாத்துதல் | 1,000 0 |
| 15. | இரும்புப் பொருட்கள் வைத்து விற்பனை | 1,000 0 |
| 16. | கட்டடப் பொருட்கள் வைத்து விற்பனை | 1,000 0 |
| 17. | 20 பைக்கட்டுகளுக்கு மேல் சீமெந்து வைத்து விற்பனை | 1,000 0 |
| 18. | மரக்காலை அல்லது மரத்தளபாடம் வைத்து விற்பனை | 1,000 0 |
| 19. | தச்சுத் தொழிற்சாலை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 20. | வீட்டுத்தளபாடங்கள் வைத்து விற்றல் | 1,000 0 |
| 21. | விறகுக் காலை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 22. | மரக்கறிக்கடை வைத்து நடாத்துதல் | 350 0 |
| 23. | 1000 தேங்காய்களுக்கு மேல் வைத்து விற்பனை செய்தல் | 1,000 0 |
| 24. | ஆபரணங்கள் (பொன்) தயாரித்தல், பழுதுபார்த்தல் | 1,000 0 |
| 25. | வைக்கோல் வைத்து விற்பனை செய்தல் | 500 0 |
| 26. | மதுபானசாலை வைத்திருத்தல் | 3,000 0 |
| 27. | கடலை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 300 0 |
| 28. | சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 |
| 29. | சைக்கிள் உதிரிப்பாகம் விற்பனை செய்தல் | 1,000 0 |
| 30. | தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி திருத்துமிடம் | 1,000 0 |
| 31. | கொல்லுலையும் பட்டறையும் வைத்திருத்தல் | 850 0 |
| 32. | சாதாரண கொல்லுலை வைத்திருத்தல் | 400 0 |
| 33. | கயிறு அல்லது தும்பு உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 750 0 |
| 34. | கள்ளு சேகரிக்கும் நிலையமும் விற்பனை நிலையமும் | 1,000 0 |
| 35. | வெல்டிங் கராஜ் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 36. | லேத் இயந்திர சாதன நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 37. | பற்றறி சார்ஜ் பண்ணும் நிலையம் வைத்து நடாத்துதல் | 500 0 |
| 38. | குசன் செய்யும் நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 39. | தொலைக்காட்சி, வானொலி உதிரிப்பாக விற்பனை நிலையம் | 1,000 0 |
| 40. | கடிகாரம் திருத்தும் நிலையம் | 400 0 |
| 41. | புதிய சைக்கிள் விற்பனை நிலையம் | 1,000 0 |
| 42. | பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் எரிபொருள் நிலையம் | 3,000 0 |
| 43. | தனிப்பட்ட வைத்தியசாலை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 44. | புடவை விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 45. | புடவைக் கைத்தொழில் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 46. | செயற்கை இரசாயன உரம் வைத்திருத்தல் | 1,000 0 |

| இல. | வியாபாரத்தின் தன்மை | 2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 47. | கிருமிநாசினி வைத்து விற்பனை செய்தல் | 1,000 0 |
| 48. | பாதணிகள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 49. | பெயின்ற், வாணிஸ், டிஸ்ரெம்பர் வைத்து விற்பனை | 1,000 0 |
| 50. | படம் பிறேம் போடும் கடை வைத்திருத்தல் | 500 0 |
| 51. | இயந்திரம் மூலம் மிளகாய் மற்றும் தானியங்கள் அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1,000 0 |
| 52. | அரிசி ஆலை வைத்திருத்தல் தரம் "A" | 1,000 0 |
| 53. | அரிசி ஆலை வைத்திருத்தல் தரம் "B" | 800 0 |
| 54. | 100 கோழிகளுக்கு மேல் பண்ணை வைத்திருத்தல் | 600 0 |
| 55. | புகைப்படம் எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 56. | பாட்டுகள் ஒலிப்பதிவு செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 800 0 |
| 57. | புத்தகங்கள், காகிதாதிகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 750 0 |
| 58. | தொலைக்காட்சி, வீடியோ கெசட் வாடகைக்கு விடும் நிலையம் | 750 0 |
| 59. | அங்காடி வியாபாரம் செய்தல் | 300 0 |
| 60. | கொங்கிறீற் கல் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 61. | மணிக்கடை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 62. | கோழித்தீன் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 63. | தானியங்கள் விற்பனை செய்தல் | 750 0 |
| 64. | செங்கல் உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 750 0 |
| 65. | சீமெந்து பூக்கள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 66. | கொங்கிறீற் கம்பம் உற்பத்தி செய்தல் | 1,000 0 |
| 67. | அச்சகம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 68. | நல்லெண்ணெய் ஊற்றி அடைக்கும் நிலையம் | 600 0 |
| 69. | காஸ் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 70. | மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 71. | ஆடைகள், தைக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 |
| 72. | ரயர், ரியூப், வால்கனைஸ் செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 73. | மோட்டார் சைக்கிள் திருத்தும் இடம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 74. | சுண்ணாம்பு சூளை நடாத்துதல் | 350 0 |
| 75. | சுண்ணாம்பு பைக்கட் பண்ணலும் விற்றலும் | 750 0 |
| 76. | நகைக்கடை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 77. | ஒலிபெருக்கி வாடகைக்கு விடும் நிலையம் நடாத்துதல் | 1,000 0 |
| 78. | கல்குவாரி வைத்து நடாத்துதல் | 3,000 0 |
| 79. | கல் உடைக்கும் தொழிற்சாலை வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 80. | கருங்கல் பாவனைப்பொருள் செய்தலும் விற்றல் | 1,000 0 |
| 81. | தொலைத்தொடர்பு நிலையம் வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 82. | இருப்பிட வசதியுள்ள விடுதி வைத்து நடாத்துதல் | 1,000 0 |
| 83. | ஐஸ்கிறீம் தயாரித்தல், விற்றல் | 1,000 0 |
| 84. | இனிப்பு, ரொபி தயாரித்து விற்றல் | 1,000 0 |
| 85. | மிக்சர் தயாரித்து விற்றல் | 1,000 0 |
| 86. | பால் சேகரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 |
| 87. | சவர்க்காரம் உற்பத்தி செய்தல், விற்றல் | 500 0 |
| 88. | மரணச்சடங்குப் பொருட்கள் உற்பத்தி செய்தல், விற்றல் | 1,000 0 |
| 89. | ஆடைக்கு பற்றிக் போடுதல் | 500 0 |
| 90. | புகையிலை பதப்படுத்துதல் | 500 0 |
| 91. | அப்பியாசக் கொப்பி ஏற்றுமதி | 1,000 0 |
| 92. | அப்பியாசக் கொப்பி கட்டுமிடம் | 750 0 |
| 93. | கோழி இறைச்சிக்கடை வைத்திருத்தல் | 1,000 0 |
| 94. | திருமணப் பொருத்துநர் தரகு சேவை | 1,000 0 |
| 95. | கட்டிட வரைபடம் வரைபவர் | 1,000 0 |

| இல. | வியாபாரத்தின் தன்மை | 2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 96. | கட்டிடம் வயரிங் இணைப்பு வேலைகள் தொழில் | 1,000 0 |
| 97. | வாகன சேவிஸ் நிலையம் | 1,000 0 |
| 98. | பசுக்கள் (மாட்டுப்பண்ணை) பண்ணை வைத்திருத்தல் | 750 0 |
| 99. | எலக்ரோணிக் மோட்டார் கொயில் ரீ - வைண்டிங் | 1,000 0 |
| 100. | இன்ரர்நெட் கணினி வகுப்புகள் நடாத்துதல் | 1,000 0 |
| 101. | தனியார் கல்வி நிலையங்கள் நடாத்துதல் | 500 0 |
| 102. | CD கசற் விற்பனை செய்தல் | 1,000 0 |
| 103. | வெற்றிலைக்கடை நடாத்துதல் | 500 0 |
| 104. | மோட்டார் வாகனங்கள் விற்பனை செய்தல் | 1,000 0 |
| 105. | ரயர், ரியூப் விற்பனை நிலையம் | 750 0 |
| 106. | கிடுகு விற்பனை நிலையம் | 400 0 |
| 107. | தனியார் உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம் | 1,000 0 |
| 108. | அழகுபடுத்தல் நிலையம் நடாத்துதல் | 1,000 0 |
| 109. | மோட்டார் உதிரிப்பாக நிலையம் | 1,000 0 |
| 110. | நெற்கபே | 750 0 |
| 111. | கட்டிட ஒப்பந்தக்காரர் நிலையம் | 1,000 0 |
| 112. | செல்லப்பிராணி நிலையம் | 500 0 |
| 113. | பாரிய புடவைக் கைத்தொழில் வைத்திருத்தல் | 1,000 0 |
| 114. | மாட்டுப்பட்டி 10 மாடுகளுக்கு மேல் வைத்திருத்தல் | 500 0 |
| 115. | மாட்டுப்பண்ணை உற்பத்தி விற்பனை நிலையம் | 1,000 0 |
| 116. | பலசரக்கு விற்பனை நிலையம் "யூ" | 1,000 0 |
| 117. | பலசரக்கு விற்பனை நிலையம் "டீ" | 800 0 |
| 118. | பலசரக்கு விற்பனை நிலையம் "ஊ" | 650 0 |
| 119. | பலசரக்கு சிறு வியாபாரம் | 500 0 |
| 120. | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம் (சைக்கிள், நடை, சிறிய வண்டிகள் மூலம்) | 500 0 |
| 121. | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம் (சிறுவண்டிகள் தவிர்ந்த வான் போன்ற ஏனைய வாகனங்கள் மூலம்) | 1,000 0 |
| 122. | தொலைத்தொடர்பு கோபுரம் | 50,000 0 |
| 123. | முச்சக்கரவண்டி | 3,000 0 |
| 124. | வங்கி சேவை உரிமம் (ஒவ்வொரு தனித்தனி சேவைகளுக்கானது) | 3,000 0 |
| 125. | நடைபாதை வியாபாரத்திற்கான ஒரு நாள் உரிமக்கட்டணம் | 250 0 |
| 126. | உற்சவகால விசேட உரிமக்கட்டணம் | |
| | சிறிய வியாபாரம் | 250 0 |
| | ஐஸ்கிறீம் கடை | 1,000 0 |
| | ஐஸ்கிறீம் வான் | 1,000 0 |
| | கச்சான் கடை | 1,000 0 |
| | உலோகப்பொருள் விற்பனைக்கடை | 1,000 0 |
| | அழகுசாதனப் பொருள் விற்பனைக் கடை | 1,000 0 |
| | உணவகம் | 1,000 0 |
| | தள்ளுவண்டில் வியாபாரம் | 500 0 |
| | துவிச்சக்கரவண்டில் வியாபாரம் | 500 0 |
| | நடமாடும் வெதுப்பக உற்பத்தி | 1,200 0 |

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*உள்ளூராட்சி மன்றங்களின் மறுசீரமைப்பு சுற்றுநிருபத்திற்கு அமைவாக தொலைத்தொடர்பு கம்பங்களின் அறவீடு அறிவித்தல் – 2015*

*வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல வீதி ஓரங்களில் நாட்டப்படும் தொலைபேசிக் கம்பங்கள் அனைத்திற்கும் அறவிடற்பாலதான வியாபார அறவீட்டுக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக, உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இணைப்பு 1 இல் பிரேரணைகளும் மற்றும் சிபாரிசுகளும் என்ற பகுதியில் நிதி முகாமைத்துவம் வருமானங்களும் என்ற உப தலைப்பின் கீழ் இல. 6.5 பகுதியில் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அடங்கலாக தொலைபேசி கம்பங்களுக்கு வியாபார அறவீட்டு வரி ஒன்றை அறவீடு செய்வதாக கடந்த 2015.01.22 ஆந் திகதியில் நடைபெற்ற சபையின் விசேட கூட்டத்தில் 12 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கம்பங்களுக்கான வரியினை 01.01.2015 ஆந் திகதியில் இருந்து வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.*

*மு. பாலசுப்பிரமணியம்.*
*தவிசாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,*
*நெடுங்கேணி,*
*வவுனியா,*
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| இல. | தன்மை | அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | 24 அடி கொண்ட தொலைபேசி கம்பம் ஒன்றிற்கு வருடம் ஒரு தடவை | 120 0 |
| 2. | 24 அடிகொண்ட தொலைபேசி அமைவு பரிசோதனைக் கட்டணம் (ஆரம்பக்கட்டணம்) | 150 0 |

*4-134/7*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சட்டம் (126 ஆம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல் – 2015*

*1987 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 1024 ஆம் இலக்க 17.04.1998 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 520/7 ஆம் இலக்க 23.08.1988 ஆந் திகதிய நியமனத் துணைவிதியின் 9 ஆம் பிரிவில் "கழிவுப்பொருள் துப்பரவாக்கும் சேவை பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய துப்பரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு மாதந்தோறும் செலுத்துதல் வேண்டும்" என்பதற்கு இணங்க குப்பை அகற்றப்படும் இருப்பிடம் ஒன்றிற்கு மாதாந்தம் 60 ரூபா கட்டணமாக அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

*மு. பாலசுப்பிரமணியம்.*
*தவிசாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,*
*நெடுங்கேணி,*
*வவுனியா,*
*2015, சனவரி 21.*

| | |
|---|---|
| கடைகள், தேனீர்ச்சாலைகள் கழிவுகளின் அளவிற்கு ஏற்ப | 200 0 - 1,800 0 |
| அரச தனியார் நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றிற்கு | 200 0 - 1,800 0 |
| ஹோட்டல் தரத்திலான உணவகங்கள் மாதம் ஒன்றிற்கு | 1,800 0- 3,000 0 |

4-134/8

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

ஆதன வரி விதித்து அறவிடல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1), (2), (3), ஆம் பிரிவின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள் இவ் ஆண்டில் அப்பிரதேசங்கள் அடைந்துள்ள அபிவிருத்திற்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளில் ஆதனவரி அறவிடுவதற்கான முன்னாயத்த வேலைகள் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கெணி வடக்கு
நெடுங்கேணி தெற்கு
கனகராயன் குளம் வடக்கு
கனகராயன் குளம் தெற்கு
புளியங்குளம் வடக்கு
புளியங்குளம் தெற்கு
மதியாமடு
நைனாமடு

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

4-134/9

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்
109 (ஈ) பிரிவின் பிரகாரம் அறிவித்தல்-2015

குழாய் கிணறுகளுக்கான சேவைக்கட்டண அறவீடு வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சகல குழாய்க் கிணறுகள் சார்பிலும், குழாய் கிணறு ஒன்றினைப் பாவிக்கும் பாவனையாளர் குடும்பம் ஒன்று மாதாந்தம் 20 ரூபா சேவைக்கட்டணம் ஒன்றை 01.01.2013 ஆம் திகதியிலிருந்து அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 109 (ஈ) இன் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
2015, சனவரி 21.

4-134/10

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*148 (4) ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வரி அறிவித்தல்-2015*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணைக்கு அமைவாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை வாகன தரிப்பிட கட்டணம் கீழ்வருமாறு அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| இல | தன்மை | 2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் மாதாந்தம் | 100.00 |
| 2. | ஒவ்வொரு கை வண்டிக்கும் மாதாந்தம் | 100.00 |
| 3. | முச்சக்கர வண்டி தரிப்பிடம் மீதான வரி மாதாந்தம் | 600.00 |
| 4. | இரு சக்கர உழவு இயந்திரத் தரிப்பிடம் மீதானவரி வருடாந்தம் | 300.00 |
| 5. | நான்கு சக்கர உழவு இயந்திரம் | 600.00 |

*4-134/12*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*148 (4) ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான கட்டணம் விதித்தல்-2015*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை துவிச்சக்கர வண்டி உரிம கட்டணத்தினை ரூபா 20 ஆக அறவிடுவது என 04 ஆம் இலக்க 20.01.2015 ஆம் திகதிய சபைத் தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கமைவாக குறித்த கட்டணத்தை அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| *இல.* | *தன்மை* | *2015 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச.* |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிஉரிமம் வருடாந்தம் | 20.00 |

*4-134/11*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*அசைவற்ற சொத்துக்களுக்கான கட்டணம்-2015*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 18 (ஆ) பாகம் II, அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும், சொத்துக்களையும், பொறுப்புக்கள் என்பவற்றையும் உரித்தாக்கல் தொடர்பில், எமது சபைக்குட்பட்ட மூலப்பொருட்களை அகழ்ந்து செல்வோரிடம் இருந்து "விசேட அபிவிருத்திக் கட்டணம்" ஒன்றினை கீழ்வருமாறு அறவிடுவதென கடந்த 20.12.2012 ஆம் திகதிய 4 ஆம் இலக்க தீர்மானம் சபையால் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.*

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| *இல.* | *தன்மை* | *அறவீடு ரூபா ச.* |
|---|---|---|
| 1. | ஒரு கீப் கல்லு ஏற்றிச்செல்வதற்கு | 66.67 |
| 2. | ஒரு கீப் கிரவல் ஏற்றிச் செல்வதற்கு | 50.00 |

*4-134/18*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல் -2015*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு 20.01.2015 ஆந் திகதிய பொதுச்சபைக் கூட்டத்தில் 12 ஆம் இலக்க தீர்மானம் மூலம் பின்வருமாறு நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*பிரதான விதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதியில் பகல், இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகள் நடமாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளில் இரவு வேளையில் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.*

*கட்டாக்காலியாக பிடிபடும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும் தண்டப்பணத்தொகை ரூபா 1000.00 மும் சிறிய கால்நடைகளுக்கு ரூபா 500.00 ஆகவும் பராமரிப்புச் செலவாக ஒரு நாளைக்கு ரூபா 200.00 உம் அறவிடப்படும்.*

*மு. பாலசுப்பிரமணியம்.*
*தவிசாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,*
*நெடுங்கேணி,*
*வவுனியா,*
*2015, சனவரி 21.*

*4-134/13*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

இடங்கள் தெரிவு செய்தல்-2015

*வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் இடங்கள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு என 20.01.2015 ஆம் திகதிய கூட்டத்தில் 2 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

**நடமாடும் மற்றும் ஒரு வாரத்திற்குற்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு**

*நெடுங்கேணி- கமநலசேவைகள் நிலையத்தில் இருந்து புதிய பஸ்தரிப்பு நிலையம்*
*கனகராயன்குளம்-கனகராயன்குளம் மரக்கறிச் சந்தைக்கு அருகில்*
*புளியங்குளம்-புளியங்குளம்மரக்கறிச் சந்தைக்காணி*

**வாகன தரிப்பிடம்**

*நெடுங்கேணி நகர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு அருகில்*
*நெடுங்கேணி ஒட்டிசுட்டான் சந்தி*
*நெடுங்கேணி பஸ் நிலையம், மரக்கறிச்சந்தை முன்பகுதி*
*புளியங்குளம் சந்தை*
*கனகராயன்குளம்சந்தி, கனகராயன்குளம்சந்தை முன்பகுதி*

**திண்மக்கழிவு புதைக்கும் இடம்**

*சூடுவெந்தான்- பெரியமடு சூடுவெந்தான் வீதியில் இருந்து 2 கி.மீ. அப்பால்*

*மு. பாலசுப்பிரமணியம்.*
*தவிசாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,*
*நெடுங்கேணி,*
*வவுனியா,*
*2015, சனவரி 21.*

*4-134/16*

F 3 - B 80935

## வவுனியா வடக்கு பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*மலம் அகற்றுவதற்கான அறிவித்தல்-2015*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 95 ஆம் இலக்க அட்டவணைக்கு அமைவாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் காணப்படும் வீட்டு, நிறுவனங்களின் மலகூடங்களின் கழிவுகளை எமது வாகனங்களான கலிஎம்ரியர் மூலம் அகற்றுவது தொடர்பில் கட்டணம் ஒன்றினை 01.01.2015 ஆம் திகதியில் இருந்து கீழ்வருமாறு அறவிடுவதென கடந்த 2015.01.22 ஆம் திகதிய 12 ஆம் இலக்க தீர்மானம் சபையால் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.*

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| இல | தன்மை | அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | கலிஎம்ரியர் மூலம் மலம் அகற்றல் கட்டணம் (நிர்வாக பரப்பெல்லைக்கு உள்ளான பகுதிகள்) | 8500 0 |
| 2. | கலிஎம்ரியர் மூலம் மலம் அகற்றல் கட்டணம் (நிர்வாக பரப்பெல்லைக்கு வெளியில் உள்ள பகுதிகள்) | 10,000 0 |
| 3. | உழவு இயந்திர கலிஎம்ரியர் மூலம் (சிறிய) மலம் அகற்றல் கட்டணம் (நிர்வாக பரப்பெல்லைக்கு உள்ளான பகுதிகள்) | 5,000 0 |
| 4. | உழவு இயந்திர கலிஎம்ரியர் மூலம் (சிறிய) மலம் அகற்றல் கட்டணம் (நிர்வாக பரப்பெல்லைக்கு வெளியில் உள்ள பகுதிகள்) | 7,500 0 |

*4-134/15*

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

இடங்கள் வரையறை செய்தல்-2015

*வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் மரக்கறி மற்றும் மீன் சந்தைகள் தற்போது வழங்கப்பட்டதை தொடர்ந்து சந்தைகளில் இருந்த 2 km சுற்றுவட்டாரப் பகுதியில் மரக்கறி, மீன் வியாபாரம் விற்பனை செய்வதற்கு தடை செய்வதென 20.01.2015 திகதிய கூட்டத்தில் 7ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

மு. பாலசுப்பிரமணியம்.
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை அலுவலகம்,
நெடுங்கேணி,
வவுனியா,
*2015, சனவரி 21.*

**அட்டவணை**

| | அறவிடப்படும் வேறு கட்டணங்கள் | அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | நூலக அங்கத்துவ விண்ணப்ப படிவக்கட்டணம் | 20 0 |
| 2. | நூலக சேமிப்புக்கட்டணம் | 100 0 |
| 3. | புத்தகம் ஒப்படைத்தல் தாமதக் கட்டணம் நாளொன்றிற்கு | 1 0 |
| 4. | அங்கத்துவத்தை புதுப்பித்தல் | 50 0 |

*4-134/14*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்ரீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை–2015***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 02.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2015 |
| | | வெள்ளி | 10.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2015 |
| | | வெள்ளி | 17.04.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 02.04.2015 |
| | | வெள்ளி | 24.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.04.2015 |
| | | வியாழன் | 30.04.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2015 |
| **மே** | .. | வெள்ளி | 08.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2015 |
| | | வெள்ளி | 15.05.2015 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.04.2015 |
| | | வெள்ளி | 22.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.05.2015 |
| | | வெள்ளி | 29.05.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.05.2015 |
| **யூன்** | .. | வெள்ளி | 05.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2015 |
| | | வெள்ளி | 12.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2015 |
| | | வெள்ளி | 19.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2015 |
| | | வெள்ளி | 26.06.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2015 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

F 4 - B 80935